# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை
## (31.01.2024 முதல் 04.02.2024)

**அறிக்கைஎண் 009/2024** **தேதி.30.01.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 3°செ முதல் 9°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது

### ஈரோடுமாவட்டத்தின் கடந்தவாரவானிலை

ஈரோடு மாவட்டத்தின் 25.01.24 முதல் 29.01.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 30°செ முதல் 32°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 21°Cமுதல் 22°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 89 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 31 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### ஈரோடுமாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (23.01.2024 முதல் 24.01.2024) | | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 30.01.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/01 | 17/01 | 17/01 | 17/01 | 17/01 | தேதி | நாள்-1 26/01 | நாள்-2 27/01 | நாள்-3 28/01 | நாள்-4 29/01 | நாள்-5 30/0 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 1 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 32 | 30 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 30 | 31 | 31 | 32 |
| 21 | 21 | 21 | 21 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 19 | 20 | 20 | 20 | 20 |
| 4 | 4 | 6 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 2 | 0 |
| 79 | 81 | 89 | 86 | 80 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 70 | 90 | 90 |
| 35 | 31 | 46 | 36 | 38 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 10 | 11 | 10 | 9 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 4 | 8 | 8 | 6 |
| 90 | 90 | 70 | 70 | 70 | காற்றுவீசும் திசை | 160 | 160 | 140 | 140 | 140 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (31.01.2024 முதல் 04.02.2024))

வரும் நாட்களில்வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| ஈரோடு மாவட்டத்தில் உள்ளதொகுதி வாரியாகஉள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **31-01-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **01-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **02-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **03-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **04-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொதுஅறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்குமண்டலப குதிகளில் 4 -10 கி.மீ வேகமான காற்றுடன் வறண்டவானிலைஎதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலைசற்று உயர்ந்து வருகிறது. மண் ஈரத்தினைபொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும். வறண்ட வானிலையினைப் பயன்படுத்தி அறுவடை நிலையிலுள்ளபயிர்களில் உடனடியாக அறுவடை செய்து அறுவடை செய்து நன்கு உலர்த்தி சேமிக்கவும். அறுவடைமுடிந்தபிறகுநிலத்தினைகொத்துஅல்லதுசட்டிக் கலப்பைகொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடைகால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம்.பயிர் கழிவுகளை எரிக்காமல், நிலத்தில் உழுவதன் மூலம் பயிர் கழிவுகள் எளிதில் மட்கும். |
| நெல் | பூக்கும் பருவம் | நிலவும் வானிலையில் நெற்பயிரில் கதிர் நாவாய் பூச்சியின் தாக்குதல் தென்பட்டால் ஒருலிட்டர் நீரில் 2 மில்லி டைக்குளோர்வாஸ் கலந்து தெளிக்கவும். |
| கொண்டைக்கடலை | காய்பிடிக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் கொண்டைக்கடலையில் காய்த்துளைப்பான் வர வாய்ப்புள்ளது. இதனால் நன்கு கண்காணித்து மண்ணில் போதிய ஈரம் இருக்கும் பட்சத்தில் மாலத்தியான் அல்லது பென்த்தியான் 5 சத தூளை ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் தூவி கட்டுப்படுத்தவும். |
| மக்காசோளம் | விதைப்பு | நிலவும் வானிலையினைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் உள்ள |

| | | |
|---|---|---|
| | | இடங்களில் மட்டும் இறவை மக்காசோள விதைப்பினை மேற்கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | நடவு | தற்போது நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு முன் பருவ கரும்பு சாகுபடியை உடனடியாக மேற்கொள்வதன் மூலம் அதிக மகசூல் பெறலாம். |
| மஞ்சள் | கிழங்குபருக்கும் பருவம் | மஞ்சள் கிழங்கு முதிர்வடையும் நிலையில் இருப்பதால் அளவான தண்ணீர் பாய்ச்சவும். |
| வாழை | | தற்போது நிலவும் வானிலையால் வாழையில் சிக்காடாக்கோ இலைப்புள்ளிநோய் குறிப்பாக மண் ஈரம் அதிகமான இடங்களில் வரவாய்ப்புள்ளது. வயலை காய விட்டு நோய் தாக்கிய இலைகளை பறித்து எரித்து விடவும், மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டசிம் 1 கிராம் என்றஅளவில் கலந்து தெளிக்கவும். |
| கால்நடைகள் | | தற்போது நிலவும் வானிலையால் கறவை மாடுகளில் மடிவீக்கநோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே ஒரு சதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் மடியை சுத்தம் செய்யவும். |

## குறுஞ்செய்தி

- நிலவும் வானிலையால் வாழையில் சிக்காடாக்கோ இலைப்புள்ளிநோய், குறிப்பாக மண் ஈரப்பதம் அதிகமுள்ள பகுதிகளில் வர வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்க்க வயலை காயவைத்து கார்பன்டைசிம் 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**